





முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.12.2024) ஈரோட்டில் நடைபெற்ற அரசு விழாவில், 50,088 பயனாளிகளுக்கு 284 கோடியே 2 இலட்சம் ரூபாய் செலவிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி, செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி. என்.கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்தியூர் ப.செல்வராஜ், கே.இ.பிரகாஷ், கு.சுப்பராயன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.ஜி.வெங்கடாசலம், திருமதி சி.சரஸ்வதி, ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் ராஜ கோபால் சுன்கரா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.12.2024) ஈரோட்டில் நடைபெற்ற அரசு விழாவில், 951 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் 559 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 133 கோடியே 66 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 222 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் சு. முத்துசாமி, செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன், மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்தியூர் ப.செல்வராஜ், கே.இ.பிரகாஷ், கு.சுப்பராயன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.ஜி. வெங்கடாசலம், திருமதி சி. சரஸ்வதி, ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் ராஜ கோபால் சுன்கரா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த சகோதரிகளை

# தொழில் முனைவோர் ஆக்கிடவே உணவுத் திருவிழா!

## மெரினாவில் உணவுத் திருவிழாவைத் தொடங்கி வைத்து துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேட்டி !

**சென்னை, டிச. 22-**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை, மெரினா கடற்கரையில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உணவுத் திருவிழாவை திறந்து வைத்து செய்தியாளர்களை சந்தித்து அளித்த பேட்டி வருமாறு:-**

நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலின் பேரில், நம்முடைய தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் சார்பாக, முதல்முறையாக இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த உணவுத்திருவிழாவை, இன்றைக்கு மெரினா கடற்கரையில் நாங்கள் திறந்து வைத்திருக்கின்றோம்.

இந்த உணவுத்திருவிழா இன்றைக்கு தொடங்கி வருகின்ற செவ்வாய்க்கிழமை 24 ஆம் தேதி வரை 5 தினங்களுக்கு நடைபெறும். பிற்பகல் 12.30 மணியிலிருந்து இரவு 8.30 மணி வரை இந்த உணவு திருவிழா திறக்கப்பட்டிருக்கும்.

இங்கே, 65 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 150-க்கும் மேற்பட்ட சகோதரிகளால் 35 ஸ்டால்கள் திறக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு ஊரிலும், ஒவ்வொரு உணவு பிரபலமாக இருக்கும். அத்தனை வகையான உணவு வகைகளும் இங்கே உள்ள ஸ்டால்களில் இடம் பெற்றிருக்கிறது.

கிட்டத்தட்ட 100க்கும் மேற்பட்ட வகையான உணவு வகைகள் இங்கே கிடைக்கும். Reasonable-ஆன விலைக்கு இங்கே உணவுகள் விற்கப்படுகின்றன.

Ready to Eat உணவு வகைகளை விற்பனை செய்திட 7 அரங்குகள் அமைக்கப் பட்டுள்ளன.

சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்த கைவினைப் பொருட்கள் உள்ளிட்ட 45க்கும் மேற்பட்ட வகையான பொருட்கள் 3 அரங்குகளில் விற்பனைக்காக வைக்கப் பட்டுள்ளது.

சுகாதாரமான முறையில், மக்களுக்கு பிடிக்கும் வகையில், தரமான உணவுகள் இங்கே விற்கப்படுகின்றன.

இந்த உணவுத்திருவிழாவில் இந்த வருடம் ரூபாய் 2 கோடி வரைக்கும் வருவாய் கிடைக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது. சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்த சகோதரிகளை, தொழில் முனைவோர் ஆக்கிட வேண்டும் என்ற நோக்கத்தில், இந்த உணவுத் திருவிழாவை இந்த அரசு இன்றைக்கு நடத்தியிருக்கிறது.

தமிழ்நாடு அரசு எப்படி மகளிருக்கு பக்க பலமாக இருந்து அவர்களுக்கு பல்வேறுத் திட்டங்களை செயல்படுத்திக் கொண்டு வருகிறதோ, அதுபோல, பொதுமக்களுக்கு ஒரு வேண்டுகோள்: சென்னையில் உள்ள பொதுமக்கள் இந்த உணவு திருவிழாவில் கலந்து கொண்டு இங்குள்ள உணவுகளை ருசிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த உணவுத் திருவிழாவுக்கு கிடைக்கும் ஆதரவின் அடிப்படையில், அடுத்தடுத்த ஆண்டுகளில் நடத்தப்படுமா என்பது பரிசீலனை செய்யப்படும். எனவே, இந்த உணவுத்திருவிழா சிறக்க என் வாழ்த்துகளை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் குறிப்பிட்டார்.

### கொலை நடந்த இரண்டே மணி நேரத்தில் காவல்துறை துரிதமாக செயல்பட்டு 4 பேரை கைது செய்துள்ளனர்!

# புழுத்துப்போன பொய்யையே எடப்பாடி பழனிசாமி சொல்லி வருகிறார்!

## சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கண்டனம்!

*சென்னை, டிச.22-*

*கொலை நடந்த 2 மணி நேரத்தில் காவல்துறை துரிதமாக செயல்பட்டு 4 பேரை கைது செய்துள்ளனர். சட்டம் ஒழுங்கு சரி இல்லை என்று வழக்கமான புழுத்துப் போன பொய்யையே எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி சொல்லி வருகிறார் என்று சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி ட்விட்டர் பதிவில் கண்டனம் தெரிவித்துள்ளார்.*

*இதுகுறித்து அமைச்சர் எஸ்.ரகுபதியின் ட்விட்டர் பதிவு வருமாறு:-*

*திருநெல்வேலி மாவட்டம் கீழநத்தத்தைச் சேர்ந்த மாயாண்டி என்பவர் கொலை வழக்கு ஒன்றில் ஆஜராகி திருநெல்வேலி மாவட்ட நீதிமன்றத்திற்கு வரும் வழியில், நீதிமன்றத்திற்கு வெளியே கொலை செய்யப்பட்டுள்ளார். சம்பவம் நடந்த போது அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த போலீசார் கொலையாளிகளை விரட்டி சென்று ஒருவரை மடக்கிப்பிடித்துள்ளனர். காரில் தப்பி சென்ற மற்றவர்களையும் கொலை நடந்த இரண்டே மணி*



*நேரத்தில் தமிழ்நாடு காவல் துறையினர் கைது செய்துள்ளனர். இதுவரை நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் மேற்கொண்டு விசாரணை நடைபெற்று வருகிறது.*

**சட்டம் ஒழுங்கு குறித்து பேச எடப்பாடிக்கு தகுதி இல்லை!**

*இவ்வளவு துரிதமாக செயல்பட்டு கொலையாளிகள் உடனடியாக கைது செய்யப்பட்டதை பொறுக்க முடியாமல், வழக்கம் போல சட்டம் ஒழுங்கு சரியில்லை என்ற புழுத்துப்போன பொய்யை பாடத்தொடங்கியிருக்கிறார் எதிர்கட்சித்தலைவர்.*

**பொள்ளாச்சி சம்பவத்தை மறந்து விட்டாரா?**

*கடந்த அ.தி.மு.க. ஆட்சியின் போது தூத்துக்குடியில் வாழ்வாதார உரிமைக்காக போராடிய அப்பாவி மக்கள் 13 பேர் சுட்டுக்கொள்ளப்பட்ட கொடூரத்தை; மறு நாள் காலையில் டி.வி.யில் பார்த்து தான் தெரிந்து கொண்டேன் என நா கூசாமல் பொய் சொன்ன எடப்பாடி பழனிசாமிக்கு சட்டம் ஒழுங்கு பற்றி பேச எந்த தகுதியும் இல்லை.*

*சாத்தான்குளம் தந்தை-மகன் அடித்துக் கொலை, பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை, கொடைநாடு கொலை சம்பவம் என பொதுமக்கள் வெளியில் நடமாடவே அச்சப்படும் சூழலில் தமிழ்நாடு தவித்துக்கிடந்ததை மறந்துவிட்டீர்களா பழனிசாமி?*

*ஒன்றிய அரசின் தேசிய குற்ற ஆவணக் காப்பகம் வெளியிட்டிருக்கும் புள்ளி விவரங்கள் அதிமுக ஆட்சியில் குற்றச்செயல்கள் பல்கிப்பெருகிக் கிடந்ததை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன. அதன்படி 2020-ஆம் ஆண்டு இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட குற்ற வழக்குகளின் எண்ணிக்கை 8,91,700 ஆகும். 2022-ஆம் குற்ற வழக்குகளின் எண்ணிக்கை 1,93,913 என மேலும் குறைக்கப்பட்டுள்ளது. இந்தத் தரவுகளை பார்க்கும் போதே மலைக்கும் மடுவுக்குமான வேறுபாட்டை எவராலும் எளிதில் புரிந்து கொள்ள முடியும் ஆனால் ஒருவருக்கு மட்டும் புரியவே புரியாது அவர் தான் பழனிசாமி.*

*“நகரம் பற்றி எரியும் போது அக்கறையின்றி பிடில் வாசித்து ஆனந்தப் பட்ட நீரோ மன்னனாய்” ஆட்சி நடத்திய பழனிசாமிக்கு தற்போது மக்கள் நலன் பேணும் முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிடமாடல் ஆட்சியைக் கண்டு பொறாமையும் வயிற்றரெச்சலும் வருவது இயல்பு தான். பழனிச்சாமி அவர்களே கவனம் பொறாமை மன நலத்தை கெடுக்கும், வயிற்றெரிச்சல் உடல்நலத்தை கெடுக்கும்.*

*இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.*

